ஆங்கிலத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழிலே கொடுக்கப் படவில்லை. சமீபத்திலேகூட விவாதித்தோம். சட்டமன்ற நடவடிக்கைகள் தமிழிலே நடைபெற வேண்டும் என்று. ஆகவே, அரசினுடைய இந்தத் திருத்தங்களை ஆங்கிலத்திலே எழுதிக்கொடுத்து, தமிழ்மொழி பெயர்ப்பு இல்லாமல் கொடுத்தால் அது எவ்வாறு சரியாக இருக்கும்?

[முற்பகல் 11–20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழிலே ரோனியோ செய்து கொண்டிருக்கிறார்கள்; உறுப்பினர்கள் பேசுவதற்குள் கிடைத்துவிடும்.

திரு. என். சங்கரய்யா: முதலிலேயே தமிழிலே கொண்டு வருவதா அல்லது ஆங்கிலத்திலே கொண்டு வந்துவிட்டு தமிழிலே மொழி பெயர்ப்பதா?

7. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே, "இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத்துறைகள் பற்றிய) அறிக்கைகளில் தமிழ்நாடு மின்சார வாரியம் குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை (முதலாவது அறிக்கை)" அளிக்கிறேன்.

8. அரசினர் சட்ட முன்வடிவு.

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண், 11/1981.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் அ. ரகுமான்கான், கு. பா. பழனியப்பன், துரைமுருகன், இரா. கருப்பையா ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அவர்களுள் ஒருவர் தீர்மானத்தை மொழிவார்.

திரு. கு. பா. பழனியப்பன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: